**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 362 / 2023 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 2 |

| | | |
|---|---|---|
| Name | : | பாலமுருகன் |
| Father's Name | : | பழனிசாமி |
| Village | : | புதுவிராலிப்பட்டி |
| Taluk | : | ஆலத்தூர் |
| Calling | : | தனியார் நிறுவனம் |
| Religion | : | இந்து |
| Age | : | 26 |
| ACCUSED | | **எதிரி அசீம்கான் ஆஜர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.10.2024.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது புதுவிராலிப்பட்டியில் குடியிருக்கிறேன். MRF கம்பெனியில் பணிபுரிகிறேன். அ.சா.1 பாஸ்கரனை தெரியும். சாட்சிகள் கௌசிக், தினேஷ் மற்றும் ரஞ்சித் ஆகியோர்களை தெரியும். ஆஜர்எதிரி அசீம்கானை தெரியும். இந்த வழக்கு விபத்தில்இறந்து போன ராம்பிரவேஷ் குமார் என்பவரை தெரியும். விபத்து சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 11.30 மணியளவில் நடந்தது. ராம்பிரேவேஷ் குமார் Fabrication Section ஹெல்பராக பணிபுரிந்தார். TCR Plant ல் Monkey ladder shift செய்யும் போது விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் எதிரியாகிய அசீம்கான் கிரேன் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வந்தார். எதிரி அசீம்கான் கிரேன் ஆப்ரேட்டராக பணிபுரியும் போது ராம்பிரேவேஷ் குமார் அந்த கிரேனில் என்ன பணி செய்து கொண்டிருந்தார் என்றால் அச்சமயத்தில் நான் அங்கு இல்லை. விபத்து நடந்த விவரத்தை கம்பெனியில் வேறு கான்டிராக்கிட்டில் பணிபுரியும் ஒரு நபர் சொல்லி தெரிந்து கொண்டேன். விபத்து

ஏற்பட்ட பிறகு ராம்பிரேவேஷ் குமாரை SRM மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். விபத்து சம்மந்தமாக அ.சா.1 பாஸ்கரன் போலீசில் புகார் கொடுத்தார். அ.சா.1 கொடுத்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். போலீஸ் என்னை விசாரிக்கும் போது தற்போது கூறியது போல் தான் கூறினேன்.

**( சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

போலீஸ் என்னை விசாரிக்கும் போது போலீஸ் விசாரணையில் சம்பவத்தை நான் நேரடியாக பார்த்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தற்போது எதிரி அசீம்கான் MRF கம்பெனியில் பணிபுரிகிறாரா என்றால் இல்லை. ஏற்கனவே எதிரி நான் பணிபுரியும் கம்பெனியில் பணிபுரிந்த போது எனக்கும் அவருக்கும் பழக்கவழக்கம் உண்டு என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன் என்றும் அதற்கு ஆதரவாக வாக்குமூலமும் அளித்துவிட்டேன். எதிரி எனக்கு பழக்கமானவர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

விபத்து நடந்த விவரம் ஒரு நபர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். அந்த வாகனத்தை எதிரி அசீம்கான் ஓட்டினார் என்ற விவரத்தையும் அந்த நபர் தான் எனக்கு சொன்னார். சம்பவம் நடந்ததை கேள்விபட்டு அரை மணிநேரத்தில் சம்பவம் இடத்திற்கு சென்றேன். நான் சென்ற பிறகு அரை மணிநேரத்தில் அ.சா.1பாஸ்கரன் அந்த இடத்திற்கு வந்துவிட்டார். அ.சா.1 சம்பவ இடத்திற்கு வந்த போது அருகில் இருந்தவர்கள் சம்பவத்தைப்பற்றி அவரிடம் சொன்னார்கள். சாலைக்கும் TCR Plant ற்கும் இடையில் 200 மீ இடைவெளியிருக்கும். அந்த Plant, சாலை முழுவதும் சிசிடிவி கேமராவால் கண்காணிக்கப்படுகிறது என்றால் சரிதான். அந்த சிசிடிவிகேமரா பதிவுகளை பார்த்தால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றும் யார் யார்

சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்ற விவரமும் தெரிய வரும் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடம் வந்து அருகில் உள்ள கேமரா பதிவுகளைப் பார்வையிட்டார்கள் என்றால் சரிதான்.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**